## செப்டம்பர் – 23 – ஞாயிறு

### “மானிடமகன் மக்கள் கையில் ஒப்புவிக்க இருக்கிறார்.” மாற்கு 9:31

**முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் 2: 12,17 – 20**

”நீதி மான்களைத் தாக்கப் பதுங்கியிருப்போம் ஏனெனில் அவர்கள் நமக்குத் தொல்லையாய் இருக்கிறார்கள் நம் செயல்களை எதிர்க்கிறார்கள் திருச்சட்டத்திற்கு எதிரான பாவங்களுக்காக நம்மைக் கண்டிக்கிறார்கள். நற்பயிற்சியை மீறிய குற்றங்களை நம்மீது சுமத்துகிறார்கள். அவர்களுடைய சொற்கள் உண்மையா எனக் கண்டறிவோம் முடிவில் அவர்களுக்கு என்ன நிகழும் என ஆய்ந்தறிவோம். நீதிமான்கள் கடவுளின் மக்கள் என்றால், அவர் அவர்களுக்கு உதவிசெய்வார் பகைவரிடமிருந்து அவர்களை விடுவிப்பார். அவர்களது கனிவினைக் கண்டுகொள்ளவும், பொறுமையை ஆய்ந்தறியவும், வசைமொழி கூறியும் துன்புறுத்தியும் அவர்களைச் சோதித்தறிவோம். இழிவான சாவுக்கு அவர்களைத் தீர்ப்பிடுவோம் ஏனெனில் தங்கள் வாய்மொழிப்படி அவர்கள் பாதுகாப்புப் பெறுவார்கள்.

**பதில்பாடல் :** என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய்
உள்ளோருடன் இருக்கிறார்.

**இரண்டாம் வாசகம் : யாக்கோபு 3 : 16 – 4 : 3**

அன்பிற்குரியவர்களே பொறாமையும் கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ்செயல்களும் நடக்கும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியைநாடும் பொறுமை கொள்ளும் இணங்கிப் போகும் தன்மையுடையது இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது. நடுநிலை தவறாதது. வெளிவேடமற்றது. அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனிவிளைகிறது. உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணமென்ன? உங்களுக்குள்ளே போராடிக்கொண்டிருக்கும் சிற்றின்ப நாட்டங்கள் அல்லவா? நீங்கள் ஆசைப்படுவது கிடைக்காததால் கொலை செய்கிறீர்கள் பேராசை கொள்கிறீர்கள் அதைப்பெற முடியாததால் சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். அதை நீங்கள் ஏன் பெறமுடிவதில்லை. நீங்கள் கடவுளிடம் கேட்பதில்லை. நீங்கள் கேட்டாலும் ஏன் அடைவதில்லை? ஏனெனில் நீங்கள் தீய எண்ணத்தோடு கேட்கிறீர்கள் சிற்றின்ப நாட்டங்களை நிறைவேற்றவே கேட்கிறீர்கள்.

**நற்செய்தி : மாற்கு 9 : 30 - 37**

அக்காலத்தில் இயேசுவும் அவருடைய சீடர்களும் அங்கிருந்து புறப்பட்டுக் கலிலேயா வழியாகச் சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று இயேசுவிரும்பினார். ஏனெனில், ”மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார் அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள். கொல்லப்பட்ட மூன்று நாள்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுவார்” என்று அவர் தம்சீடருக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரிடம் விளக்கம் கேட்கவும் அவர்கள் அஞ்சினார்கள். அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்தார்கள். அவர்கள் வீட்டில் இருந்தபொழுது இயேசு, ”வழியில் நீங்கள் எதைப்பற்றி வாதாடிக் கொண்டிருந் தீர்கள்?” என்று அவர்களிடம்கேட்டார். அவர்கள் பேசாதிருந் தார்கள். ஏனெனில் தங்களுள் பெரியவர் யார் என்பதைப்பற்றி வழியில் ஒருவரோடு ஒருவர் வாதாடிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவர் அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், ”ஒருவர் முதல்வராக இருக்கவிரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்” என்றார். பிறகு அவர் ஒரு சிறு பிள்ளையை எடுத்து, அவர்கள் நடுவே நிறுத்தி, அதை அரவணைத்துக்கொண்டு, ”இத்தகைய சிறுபிள்ளைகளுள் ஒன்றை என்பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னைமட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார்” என்றார்.

**தியானம்:** பொதுக் காலத்தின் 25ம் வார இறைவார்த்தைப் பகுதிகள் இறைமகன் கிறிஸ்து கொண்டு வந்த மீட்பில் பங்கேற்க எம்மை அழைக்கின்றன. எமது வாழ்வில் முன்னறிவித்தல் என்பது கட்டாயமான ஒன்றாக உள்ளது. ஒருவர் ஒரு நிகழ்வை முன்னறிவிக்கும் பொழுது நாம் அந்த நிகழ்வுக்காக நம்மை நாமே தயாரிக்கின்றோம். இன்றைய நற்செய்தியில் இயேசு இரண்டாவது முறையாக தனது பாடுகளையும், இறப்பையும் முன்னறிவிக்கிறார். ஆனால் சீடர்களால் அதைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஏனெனில் இயேசுவின் மனநிலையும் சீடர்களின் மனநிலையும் வேறுவேறாகவே இருக்கின்றன. இயேசு தந்தையின் சித்தத்தை நிறைவேற்றும் மனநிலையில் இருக்கிறார். சீடர்களோ தங்கள் எதிர்காலத்தை எண்ணி தங்களுள் யார் பெரியவர் என்று வாதிடுகின்றனர். ஆனால் இயேசுவோ தலைமைத்துவத்தைப்பற்றி தனது சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். அனைவருக்கும் பணிசெய்பவர் தான் தலைவர் என்ற மாற்று மதிப்பீட்டை இயேசு முன்வைக்கிறார். நமது ஆன்மீக வாழ்வின் உச்சநிலை என்பது நமது மனநிலையையும் இயேசுவின் மனநிலையையும் ஒன்றாகும் நிலைதான். அதாவது நமது மனநிலை சிறிது சிறிதாக மாற்றம் பெற்று இயேசுவோடு இணைநது செல்லும் மனநிலைக்கு வரவேண்டும். இது எளிதான ஒன்றல்ல, இயேசுவின் மனநிலைக்கு வரவேண்டு மென்றால் முதலில் கற்றுக்கொள்ள வேண்டியது தாழ்ச்சி என்னும் புண்ணியம். நற்செய்தியில் இயேசு ஒரு குழந்தயை உதாரணமாகக் காட்டுகிறார். குழந்தை உளளம் கொண்டவர்கள் மட்டுமே இயேசுவையும், தந்தையையும் ஏற்பர். இயேசு மனித மீட்பிற்காகவே தன்னையே தாழ்த்திக்கொண்டவர். சிலுவைச் சாவிற்கு மனிதரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் முடிவில் வல்லமையோடு அவர் உயர்த்தப்படுவார். மக்களுக்கு மீட்பைத் தருவார். அந்த மீட்பில் நாங்கள் பங்கெடுக்க விடுக்கும் அந்த அழைப்பே அந்த முன்னறிவித்தல் ஆகும்.